# வாழ்வில் நிச்சய வெற்றிக்கு இருபது வழிகள்-6

நம்மைப் பற்றிய ஒரு தெளிவு வரும் போது தான் நாம் நான்காவது வழிக்கு வருவோம்.

நாம் பேசுவது அனைத்தும் வருமானம் உயர, அதன் மூலம் நாம் பெற வேண்டிய வசதிகளை பெற, அதன் மூலம் ஆனந்தம் பெற. ஆனால் ஊதியம் என்று எவ்வளவு அதிகமாக கிடைத்தாலும் அதில் ஒரு வரையறை இருக்கிறது. நிரந்தரம் என்பது கிடையாது. அதோடு என்ன தான் வேலை செய்தாலும் ஊதியத்திற்கு வேலை செய்யும் போது அது யாருக்கோ, அதாவது பிறருக்கு வேலை செய்வது போன்றது தான். அது என்றும் வரையறைக்கு உட்பட்டது. நமக்கு பல திறமைகள் இருந்தாலும் சில குறிப்பிட்ட திறமைகளை மட்டுமே பயன்படுத்திக் கொள்ளக் கூடியது, நாம் வேலை செய்யும் ஸ்தாபனத்தின் வரையறையே நம் வரையறையாகி விடுகிறது. நம் மற்ற திறமைகளை வெளிப்படுத்த முடிவதில்லை அல்லது பயன்படுத்துவது இல்லை. அதற்கு காரணம் நம் வரையறை என்றால் அந்த மனப்பான்மைக்கு பின்னால் இருப்பது நம் முன்னேற்றத்தைப் பற்றிய தெளிவின்மை. நாம் முன்னேற்றம் என்ற நினைவு வந்தவுடன் PROMOTION அல்லது INCREMENT அல்லது இதே போன்ற வேறு நல்ல கம்பெனியில் வேலை என்றே இருக்கிறோம். அதை தாண்டி நாம் சிந்திப்பதே இல்லை. அதிலிருந்து வெளியே வரவேண்டுமென்றால் நம் மனப்பான்மையில் மாற்றம் வரவேண்டும். வேலை செய்யும் மனப்பான்மையில் இருந்து ஒரு தொழிலதிபர், வியாபாரியின் மனநிலைக்கு மாற வேண்டும். பெரும்பாலும் தொழிலதிபர் ஆகும் ஆசை இல்லாமல் வியாபாரம், செய்யும் ஆசை இல்லாமல் அது இயல்பாக வராது. முதலீடுகள், வியாபார யுக்திகள், ஆள்பலம் என்று பலவற்றைப் பற்றிய பயம் இருக்கும். நம் திறமை, திறன் மேல் கூட நம்பிக்கை இல்லாமல் இருக்கும்.

நான் உணவகத் தொழில் அது சம்பத்தப்பட்ட வேலையில் தான் சுமார் 20 வருடம் இருந்தேன். அதனால் ஒரு கெமிக்கல் கம்பெனியில் வேறு வழி இல்லாமல் சேர்ந்தும் கூட அதில் எனக்குப் பெரிய ஓட்டுதல் ஏற்படவில்லை. வருமானமும், உணவகத் தொழில் அளவு இல்லை. ஏன் ஒரு வார tips தான் இங்கு எனக்கு ஒரு மாத சம்பளமாகவே இருந்தது. எல்லாவற்றுக்கும் மேலாக நான் பின் சேர்ந்த கெமிக்கல் கம்பெனியில் இரண்டு வருட அனுபவம் அதுவும் அரசு கான்ட்ராக்டர்களில் மட்டுமே அனுபவம் இருந்ததால் அடுத்த கட்ட முன்னேற்றம் பற்றிய தெளிவு இல்லாமல் இருந்தேன். அதோடு அந்த கம்பெனியின் முதலாளி என்னை நன்றாக கவனித்துக் கொண்டார், மரியாதையுடன் நடத்தினார் என்பதால் என் நண்பர்களும், உறவினர்களும்

அவரை விட்டு நான் விலகக்  கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்கள். குறைந்த சம்பளம் ஒரு பொருட்டல்ல என்றார்கள்.

அப்போது தான் நான் என் ஆன்மீக குருவை சந்தித்தேன்.  அவர் ஒரு தொழிலதிபருக்கான மனநிலையை நாம் எடுத்துக் கொண்டால் நாம் தொழில் முனைவர் ஆகமுடியும் என்றார். அதற்கு முதலில் உன் முதலாளியின் மனநிலையை அவருடைய, லட்சியத்தை, நோக்கத்தை, அவர் அதை அடையும் வழிகளை நீ எடுத்துக் கொள்ள முடிந்தால், அதே கம்பெனிக்கு பங்குதாரர் ஆகலாம், அல்லது அதே போல ஒரு கம்பெனி ஆரம்பிக்கலாம்  என்றார். என்னால்  அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்றாலும் என் வாழ்வில், நடத்தையில், அறிவில், என்று அனைத்திலும் ஒரு மாற்றத்தை என் குருவின் நல்லெண்ணமே கொண்டு வந்தது என்று நம்பியதால் நான் அதையேற்று விருப்பு வெறுப்பு இல்லாமல் என் முதலாளிக்காக அவரைப் போலவே உழைக்க ஆரம்பித்தேன். என் குரு சொன்னது போல ஒரே வருடத்தில் அந்த கம்பெனியின் பங்குதாரர் ஆகும் அளவிற்கு மாற்றம் வந்தது. இதை எல்லோரும் செய்ய முடியும். என்றாலும், அதற்கான  தெளிவு, முதலாளியுடனான நேரடித் தொடர்பு, அவரை பற்றிய முழு விவரம் தெரியவில்லையென்றால் அதை செய்ய முடியாது. முடியாது என்று இல்லை காலம் சற்று அதிகம் பிடிக்கும் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

அதை அனைவரும் எளிமையாக செய்யும் வழியும் இருக்கிறது. எதையுமே நாம் இருக்கும் நிலையில், தளத்தில் (LEVEL  & PLANE ) இருந்து தான் ஆரம்பிக்க முடியும், ஆரம்பிக்க வேண்டும். அதனால் நாம் இப்போது செய்துக் கொண்டு இருக்கும் வேலையில் இருந்து தான் இதை ஆரம்பிக்க முடியும். அதனால் முதலாளிக்கான அல்லது உயர்பதவிக்கான மனநிலையை, நமக்குத் தெரிந்த அளவு நாம் செய்யும் வேலையில் கொண்டு வரவேண்டும். நாம் ஒரு முதலாளிக்கு கீழ் வேலை செய்வதாக வைத்துக் கொள்வோம். அப்போது ஒரு நாள் முதல்வர் போல நாம் ஒரு நாள் மேனேஜராக இருந்தால் என்னென்ன செய்வோம், என்னென்ன மாற்றங்களைக் கொண்டு வருவோம் என்று நினைக்க வேண்டும். அப்படி நினைக்கும் போது தான் நமக்கு அடுத்த நிலைக்கான, அறிவு, ஞானம் இருப்பது தெரியும். நமக்கே நம் மேல் நம்பிக்கை வரும். அவற்றில் சிலவற்றை நாம் செய்ய முடியும் என்று இருக்கும். அதை செய்யலாம், பிரதிபலன் பாராமல் செய்யலாம். நிச்சயமாக அது இன்று இல்லாவிட்டால் கூட பிற்காலத்தில் பலன் கொடுக்கும். முடியாத இடங்களில், அதை பற்றி தெளிவாக என்ன செய்ய வேண்டும், என்ன செய்திருக்கலாம் என்பது பற்றி தெளிவாக நினைத்தைப் பார்க்கலாம். அதை

செய்ய முடியாததற்கு பல காரணங்கள் இருக்கலாம், அதிகாரம் இல்லாதது, பயம் என்று பல காரணம் இருக்கலாம். அவை அனைத்திற்கும் ஒரு பொறுப்பை மனதளவில் CONSCIOUS RESPONSIBILITY எடுக்கலாம். பிறர் தவறுக்கு நாம் பொறுப்பேற்பது என்பது பரந்த மனம். அப்படி பார்க்கும் போது மேனேஜரின் அல்லது கம்பெனியின் நடைமுறை தவறுகள் உங்களுக்குப் புரியும். முடிந்த வரை சரி செய்ய முயலலாம். அது சுயநலத்தில் இருந்து, நமக்கேன் என்று இருக்கும் நிலையில் இருந்து, வெளியே வரும் பண்பு.

இப்போது சொன்ன CONSCIOUS RESPONSIBILITY, EXPANSIVENESS , SELFLESS எல்லாமே உயர் சித்தத்திற்கான பண்பு. VALUES OF HIGHER CONSCIOUSNESS. அது உள்ளே வந்த பிறகு அது வாழ்வில் வெளிப்பட்டே ஆகவேண்டும் என்பதால் நம் வியாபாரத்திற்காக, தொழில் அமைவதற்கான சூழல் தானே அமைய ஆரம்பிக்கும். பெரும்பாலோர் அதிக வருமானம், PROMOTION , முன்னேற்றம் பெற முடியாமல் இருப்பதற்கான காரணம், இந்த வேலைக்கு, இந்த சம்பளத்திற்கு இது போதும், என்று மேல் மனதிலோ, ஆழ் மனதிலோ இருக்கும். அந்த மனப்பான்மை நம்மை பழக்கமாக, வழக்கமாக, ஜீவனில்லாமல், CONSCIOUS ஆக இல்லாமல், இயந்திரத்தனமாக, நமக்கேன் வம்பு என்னும் வகையில் வேலையை செய்ய வைக்கும். நம்மை நாமே குறுக்கிக்கொள்வதால், மனம் குறுகுவதால் வாழ்வும் அதற்கு ஏற்ப குறுகியே, முன்னேற்றம் இல்லாமலேயே  இருக்கும். எல்லாவற்றையும் எப்போதும் செய்வது போலவே செய்வோம். திறமையிலோ, திறனிலோ, செம்மையிலோ, புதுமையிலோ  எந்த மாற்றத்தையும் கொண்டு வர மாட்டேன் என்று இருப்போம். அதே போலவே எப்போதும் எல்லாமும் ஒரே மாதிரி இருக்கும் போது, பலன் மட்டும் எப்படி வேறு மாதிரி வரும். முன்னேற்றமோ, அதற்கான, வாய்ப்போ எப்படி வரும் என்ற அடிப்படை புரிதல் நமக்கு முதலில் வரவேண்டும்.

எனக்குத் தெரிந்த நல்ல விஷயத்தை கூட சொல்ல மாட்டேன், செய்ய மாட்டேன், புதிதாக எதையும் சிந்திக்க மாட்டேன், கற்றுக் கொள்ள மாட்டேன். எனக்கு தெரிந்த உயர்ந்த நிலையில், நல்ல விதத்தில் கூட ஒரு வேலையை செய்ய மாட்டேன், என்னும் மனநிலை எப்படி முன்னேற்றத்தை தரமுடியும்.

நம் வாழ்வுக்கு காட்டும் மனநிலைக்குத் தான் வாழ்வோ, பிரபஞ்சமோ மறுமொழி தரும். நாம் செய்வது அனைத்தும் நம் முன்னேற்றத்திற்கு, பிறர் முன்னேற்றத்திற்கு, அல்லது நாம் சார்ந்த கம்பெனி முன்னேற்றத்திற்கு, அது தயாரிக்கும் பொருட்களின் முன்னேற்றத்திற்கு, அதை உபயோகப்படுத்தும்

பயனாளர்கள் முன்னேற்றத்திற்கு என்று நம்மை அறியாமலேயே பலருக்கும் முன்னேற்றத்தை பற்றி நாம் நினைப்போம். அது நிச்சயம் பலன் அளிக்காமல் இருக்காது. இது நம் வாழ்கை, இதை நாம் தான் மாற்ற முடியும், அதற்கே பலன் கிடைக்கும் என்னும் வாழ்வின் அடிப்படை விதிகள், சட்டங்கள், முறைகள் ஆகியவை புரியாத வரை, ஏற்றுக் கொள்ளாத வரை நாம் இருக்கும் இடத்திலேயே இருப்போம். உழைப்பவருக்குத் தான் இறுதி பலன் போய் சேரும்.

நான் மேற்கணட சில முறைகளை நான் PARTNER ஆக இருந்த ஒரு அலுமினிய கட்டுமான பொருட்கள் செய்யும் ஒரு கம்பெனியில் பின்பற்றினேன். கம்பெனி ஆரம்பித்ததில் இருந்து அது ஓரளவு வளரும் வரை நான் சொன்னதை செய்த பங்குதாரர், அதன் பிறகு தான் சொல்வதை நான் கேட்டாக  வேண்டும் என்று நினைத்தார். பணத்துக்காக வாடிக்கையாளரை ஏமாற்றும் முறைகள் அவை. தரத்தை குறைத்து லாபம் பெரும் வழி அது. பெரும்பாலோர்  அதைத் தான் செய்கிறார்கள்  என்று அதை நியாயப்படுத்தினார். என்னால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதனால் விலக நினைத்தேன். ஆனால் பிறகு சூழ்நிலை மாறி, அவர் விலகி செல்ல நேர்ந்தது. அந்த BRAND , TRADEMARK , எனக்குச் சொந்தமானது. பரந்த மனப்பான்மை, பிறர் நிலைப்பார்வை, சுயநலமின்மை, நல்லெண்ணம் , சித்தத்தில் முன்னேற்றத்திற்கான முயற்சிகள் போன்றவை அனைத்தும் இறைவன் விரும்பும் நற்பண்புகள். MANIFESTING ASPECTS OF UNIVERSAL FORCE . அதனால் இதை செய்பவர்களுக்கு அடுத்த கட்ட முன்னேற்றம் வராமல் இருக்காது. குறைந்த பட்சம் நாம் இருக்கும் நிலையில் இருந்து இரண்டு நிலைகள், நான்கு நிலைகள் தாண்டிய பதவியோ, தொழில் வாய்ப்போ நிச்சயம் வரும்.